பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 30 திங்கட்கிழமை (11-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 15

# யாழ். வெற்றி நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்காது என்கிறது அமெரிக்கா

## அரசியல் அணுகுமுறை தேவை; கிளின்ரன் நிர்வாகம் அறிவிப்பு

நியுயோர்க், டிசம்பர். 11

யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்கா இராணுவம் கைப்பற்றியமை, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு வழிவகுக்காது — என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அரசியல் அணுகு முறையையே அமெரிக்கா ஆதரிக்கும் எனவும் கிளின்ரன் நிர்வாகம் கருத்து வெளியிட்டுள்ளது.

வாஷிங்டனில் உள்ள கிளின்ரன் நிர்வாகத்தின் பேச்சாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்கா படைகள் கைப்பற்றியமை குறித்து கருத்து வெளியிட்டார்.

அவர் இது குறித்து சொன்னதாவது:-

விடுதலைப் புலிகளின் பிரதான தளமாக இருந்த யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியது குறிப்பிடத்தக்க வெற்றியாகும்; ஆனால் இந்த வெற்றி ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்கமாட்டாது.

யாழ்ப்பாணத்தை ஆயுதப் படையினர் கைப்பற்றியிருப்பது இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியே ஆகும்.

இனப்பிரச்சினைக்த அரசியல் அணுகு முறைகள் மூலமாகவே ஒரு நிரந்தரத் தீர்வைக் காண முடியும். இத்தகைய தீர்வுக்கு அமெரிக்கா தனது உதவியை வழங்கும்.

யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வழி செய்யப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து பின்வாங்கினாலும் தொடர்ந்து செயற்படும் வகையில் அவர்கள் காட்டு பகுதியை நோக்கி சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் பலம் பெற்றுள்ளார்கள். அங்கிருந்து அவர்களை [illegible]வேரறுப்பது கடினமானதாகவே இருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டர் நிறுவனங்கள் பணம் எடுத்துவரத் தடை

சாவகச்சேரி, டிச. 11

வடக்கில் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் மேற்கொள்ள திட்டமிட்ட நிவாரணம் மற்றுப் புனர்வாழ்வுப் பணிகளுக்கு தேவையான பணத்தை எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு தடைசெய்துள்ளது என தெரியவந்தது.

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்குத் தேவையான பொருள்களை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் எடுத்துச் செல்லமுடியும் என்றும் —

அதற்கு தேவையான நிதியை பணமாக எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என்றும் — பாதுகாப்பு அமைச்சு அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களுக்கு தெரிவித்துள்ளது. (இ-3)

## 23 பொதுமக்கள் நேற்று விடுவிப்பு!

சாவகச்சேரி, டிச. 11

வலிகாமத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது படையினரால் கைது செய்யப்பட்டு பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 23 பொதுமக்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையான இவர்களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் காங்கேசன்துறையில் இருந்து 'ஹபரண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வந்தனர்.

பருத்தித்துறையில் வைத்து 12 பேரை அவர்களின் உறவினர்கள் பொறுப்பேற்றனர்.

ஏனையோரை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்றது.

விடுதலையானோர் விவரம் வருமாறு:-

★ அந்தோனிப் பிள்ளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 26 பேர் இன்னும் பலாலியில் தடுத்துவைப்பு

வடமராட்சி, டிச. 11

பலாலி முகாமில் இன்னும் 26 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று விடுதலையானோர் தெரிவித்தனர்.

இவர்களில் 15 பேரின் விவரம் பலாலி முகாமில் வைத்து சேகரிக்கப்பட்டதாகவும் சில சமயம் அவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பலாலியில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில்

★ தங்கராசா ஜெயானந்தன் (25 வயது — சண்டிலிப்பாய்)

★ ஸ்ரீமுருகதாஸ் (20 வயது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி, வடமராட்சி, கிளிநொச்சியில் அடுத்த கட்ட ராணுவ நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்

### அமைச்சர் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு, டிச. 11

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அடுத்த கட்ட ராணுவ நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை அரச சார்பு தமிழ் பத்திரிகை ஒன்றின் ஞாயிறு இதழுக்குஅளித்துள்ள விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி, வடமராட்சி மற்றும் கிளிநொச்சி பகுதிகளுக்கு தற்போது பின்வாங்கிச் சென்றுள்ள விடுதலைப்புலிகளுக்கு எதிராக விரைவில் யுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மிக விரைவில் ஏனைய பகுதிகளும் மீட்கப்பட்டுவிடும்.— — என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## படையினர் நடவடிக்கையால் பொதுமக்களுக்கே பாதிப்பு

### வாவித் தடை குறித்து தராக்கி

கொழும்பு, டிச. 10

மட்டக்களப்பு வாவிக் கரையில் உள்ள மக்களை மூன்று கிலோமீற்றர் உள்ளே செல்லுமாறும், வாவியில் உள்ள படகுகளை அப்புறப்படுத்துமாறும் இராணுவம் உத்தரவிட்டுள்ளது. மக்களை அப்புறப்படுத்தி விட்டால் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று இராணுவம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பாரிய ராணுவ நடவடிக்கையை படையினர் நேற்று முதல் ஆரம்பித்தனர்

கொழும்பு, டிச. 11

விசேஷ அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு, கல்முனை, பாணகம, அம்பாறை, காரைதீவு, மகாஓயா பகுதிகளில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலீஸ் மா அதிபர் தர்மசிறி வீரக்கோன் [illegible] வித்திருக்கிறார்.

## அச்சம் காரணமாக மக்கள் இடம் பெயர்வு

காட்டுக்குள் மறைந்திருக்கும் விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் புலிகளின் நடவடிக்கை [illegible] நடவடிக்கையின் நோக்கம் என்று பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்தார்

இராட்சத யுத்த ஹெலிகள், யுத்த டாங்கிகள் இந்த இராணுவ நடவடிக்கையில் பயன்படுத்தப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளில் அச்சம் காரணமாக மக்கள் தப்பி ஓடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா வான்படை குண்டு வீச்சு விமானங்கள் அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மக்கள் நடத்திய பூரண கதவடைப்பு எமக்கு புதிய உத்வேகத்தை அளிக்கிறது

## பாராட்டுத் தெரிவித்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், டிச, 11

ஈழத்தமிழர்கள் படுகின்ற இன்னல்களை உலகுக்கு உணர்த்த தமிழ்நாடு பூராவும் கடந்த 30 ஆம் திகதி நடத்தப்பட்ட பூரண கதவடைப்பு எமக்கு பெரும் ஆறுதலையும் உத்வேகத்தையும் அளிக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், தமிழ் நாடு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி, தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா, மறுமலர்ச்சி தி மு.க தலைவர் வை. கோபாலசாமி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கலாநிதி க. ராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன், தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமத் ஆகியோருக்கும் —

போர்வேட் புளொக், தமிழ்நாடு பிரிவுத் தலைவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு பிரிவுத் தலைவர், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு பிரிவுத் தலைவர் ஆகியோருக்கும் இக்கடிதம் அனுப்பப்பட்டது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் கடிதம் விவரம் வருமாறு:-

1948 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவை ஆட்சி புரிந்து வரும் பேரினவாத அரசுகளும் அதன் இராணுவ சக்திகளும் ஈழத்தமிழர்களுக்கு இழைத்து வரும் கொடூரங்களை சர்வதேச சமூகத்துக்கும், இந்திய மத்திய அரசுக்கும், தமிழக அரசியல் தலைவர்களும், தமிழக மக்களும் எடுத்துச் சொல்லியுள்ளார்கள், குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் இன்றும் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

எமது உறவுகளை அலைகடல் பிரித்திருந்தாலும் உள்ளத்து உணர்வுகளை பிரித்துவிட முடியாது என்பதற்கு தமிழகம் முன் உதாரணமாகத் திகழ்கிறது.

இலங்கையின் தேசிய இனமாக பல நூற்றாண்டுகளாக தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இன்று ஸ்ரீலங்கா பேரினவாத அரசு தமிழ் இன அழிப்பைச் செய்வதற்கு யுத்தத்தைத் தீவிரப் படுத்தியுள்ளது.

நாம், எமது கல்வி, கலை, பண்பாடு, பொருளாதாரம், நிலம், தேசியம் ஆகியவற்றை பாதுகாப்பதற்காகவும், அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவும் நெடுங்காலமாகப் போராடி வருகின்றோம் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த அரைநூற்றாண்டாக சிங்களப் பேரினவாதிகளால் மெல்ல மெல்லத் தமிழினம் அழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப் பட்டன. இதன் உச்சக்கட்டமாக யாழ்ப்பாண நகரை ஆக்கிரமித்து தமிழர்களின் வாழ்விடங்களை—வளங்களை அழித்து தமிழர்களை படுகொலை செய்யும் நோக்குடன் ஸ்ரீலங்கா அரசு இராணுவ நடவடிக்கையை 95 செப்டெம்பர் மாத நடுப் பகுதியில் ஆரம்பித்தது.

இராணுவம் தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தியது. பல்லாயிரக்கணக்காக ஏவப்பட்ட ஷெல் வீச்சுக்களை — விமானத் தாக்குதலை — தாங்கிக் கொள்ள முடியாத 5½ லட்சம் யாழ்ப்பாண மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெறும் கையோடு இரவோடு இரவாக இடம் பெயர்ந்தார்கள் என்ற சோகமான செய்தி கேட்டு தமிழ்நாட்டில் இருந்த எமது உடன் பிறப்புக்கள் துடிதுடித்து துவண்டார்கள் என நாம் அறிவோம்.

பல நூற்றாண்டு கால பழைமையும் பெருமையும் சிறப்பும் கொண்ட யாழ்ப்பாண மண் மீது ஸ்ரீலங்கா இராணுவம் படையெடுத்தது. இதனை அறிந்த உலகத் தமிழினம் கண்ணீர் வடித்தது. ஈழத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதியை தமிழகம் இனியும் பொறுத்துக் கொள்ளாது என்பதை தமிழகத்தில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற பூரண கதவடைப்பு நிரூபித்துக் காட்டியுள்ளது.

தமிழ் மொழி, மண், இனம், பண்பாடு, உறவு இன்னும் அழிந்துவிடவில்லை என்பதை எடுத்துக் காட்டும் வகையில் தமிழர்களின் சிறப்பிடமாக இருக்கின்ற தமிழகம் இன, மத, அரசியல் வேறுபாடுகளைக் களைந்து ஈழத் தமிழர்கள் படுகின்ற இன்னல்களை உலகுக்கு உணர்த்த தமிழ்நாடு பூராகவும் 30-11-95 அன்று பூரண கதவடைப்பு நடத்தியமை துன்புறும் வேளையில் எமக்கு பெரும் ஆறுதலையும் உத்வேகத்தையும் அளிக்கிறது.

ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகம் பொங்கி எழும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

இந்தக் கதவடைப்பிலே பங்கு கொண்ட — ஆதரவு நல்கிய அனைத்து அரசியல் கட்சிகள், தலைவர்கள், சமய, சமூக பொது நிறுவனங்கள் தமிழக மக்கள் அனைவருக்கும் தமிழீழ மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் நூற்றுக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்த யாழ்ப்பாணம் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தமிழீழ மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படி அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)


## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

700X15 கொழும்பு றீபில் ரயர் ரியூப் இரண்டு விற்பனைக்குண்டு தொடர்பு:- பொ. பாலசுப்பிரமணியம் C/o றெஜிஸ்ரார் தமோதரம் பிள்ளை வீடு, கோவில் சந்தை, கரவெட்டி மத்தி. [39484]


# தேசியத்தலைவரின் அழைப்பை ஏற்று விடுதலைப் போரில் இணைகிறேன்

## மானிப்பாய் இந்து மாணவன் பெற்றோருக்குக் கடிதம்

தேசியத்தலைவரின் அழைப்பை ஏற்று விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்வதாக தனது பெற்றோருக்கு கடிதம் எழுதிவிட்டு விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார் மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தரவகுப்பு மாணவரான செம்பியன் பற்று தெற்கைச் சேர்ந்த இ. செல்வகணேசன் (வயது 21)

அவர் தமது பெற்றோருக்கு எழுதிய கடிதம் வருமாறு:-

என் அன்புக்கும், பாசத்துக்கும் உரியவர்களே! உங்கள் அன்புக்கும், பாசத்துக்கும் தலைவணங்குகிறேன். ஆனால் தேசியத் தலைவரின் அழைப்பை ஏற்று விடுதலைப் பாதையில் என்னை இணைத்துக் கொள்கிறேன். உங்கள்மீதும் எமது தாயக மண் மீதும் உள்ள பற்றுக் காரணமாகவே போராட விரைகிறேன்.

என் பயணம் உறுதியானது. இதில் எவருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஆனால் என் நண்பர்களிடம் சொல்லுங்கள்; வீணாக உங்கள் பொழுதைப் போக்க வேண்டாம் என்று.

தாயகம் நோக்கிய விடிவுப் பயணத்துக்காக இறந்த மாவீரரின் இலட்சியப் பயணம் நோக்கி உங்கள் பாதங்களைத் திருப்புமாறு கூறுங்கள்.

என் பாசத்துக்குரியவர்களே! எனக்குப் படிக்கவும் ஆசைதான்; பட்டம் பெறவும் ஆசைதான்; ஆனால் என் தாய்நாடு இருள் சூழ்ந்து உள்ளது. இதை உணர்ந்து ஒளி ஏற்றப் போகிறேன். இதை எண்ணி வருந்தவும் வேண்டாம். தயங்கவும் வேண்டாம்.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-36)


## உடன் தொடர்பு கொள்ளவும்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த Retired A.G.A. சுப்பிரமணியம் என்பவரையும், சுழாவடியைச் சேர்ந்த மாணிக்கவாசகர் என்பவரையும் மூளாய் கதிர்காமத்தம்பி தேடுகிறார்.

தொடர்பு:

C/o. S கணேசன்,
S L.R.C. சாவகச்சேரி (அருகில்)
மில் றோட்,
மீசாலை. (39616)

## உடன் தொடர்பு கொள்ளவும்

கல்வியன்காடு சட்டநாதர் கோவிலில் வேலை செய்த அருள்ராசு, ராசலெட்சுமி, மூன்று பிள்ளைகள் எங்கிருந்தாலும் கீழ்க்காணும் விலாசத்தில் உடன் சந்திக்கவும்.

மு. சிவசுப்பிரமணியம்,
(ராசன்)
கரன் நிறுவனத்துக்கு அருகில்,
டச் றோட்,
சாவகச்சேரி.

தகவல்;
சரஸ்வதி,
திருநெல்வேலி. (39617)


## வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி, டிச. 11

தென்மராட்சிப் பகுதி வீடுகளில், தோட்டங்களில் வாழைக்குலைகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளில் வாழைக்காய், வாழைப்பழம் ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதால் வாழைக் குலைத் திருட்டுக்களும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## மண்மீட்பில் கணவனை இணைத்தார் மனைவி

சங்க காலத்தில் கட்டிய கணவனை போருக்கு அனுப்பிய தமிழ் வீர வரலாறு போன்று ஒரு குழந்தைக்குத் தாயான இளம் பெண் ஒருவர் தனது கணவனை தானே நேரில் அழைத்துச் சென்று விடுதலைப் போராட்டத்தில் இணைத்தார்.

கற்கோவளத்தைச் சேர்ந்த திருமதி மலர்விழி (23 வயது) என்ற இளம் பெண்ணே தனது கணவனை விடுதலைப் போராட்டத்தில் இணைத்தவர் ஆவார்.

தனது கணவரான ஜெ. ஜெயவாசன் (27 வயது) என்பவரை பருத்தித்துறை முதலாம் கட்டையிலுள்ள புதிய போராளிகள் இணையும் செயலகத்துக்கு அழைத்துச் சென்று விடுதலைப் போரில் இணைத்தார். (இ-173)

## கிளிநொச்சியில் அரச ஊழியருக்கு நிவாரணம்

பூநகரி, டிச 11

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சி சென்ற அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இரண்டாம் கட்ட இலவச நிவாரணம் வழங்கப் படவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளும் [illegible] களில் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-1[illegible])

### யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதால்

## பிரச்சினையில் 60 சதவீதம் தீர்க்கப்பட்டு விட்டது!

### அமைச்சர் அனுருத்த கூறுகிறார்

படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதோடு பிரச்சினையில் 60 சதவீதத்துக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது:

— பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை இவ்வாறு கூறியுள்ளார்.

பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படவேண்டுமாயின் அரசின் தீர்வுத் திட்டம் அமுல் செய்யப்படவேண்டும்.

விடுதலைப் புலிகள் முல்லைதீவுக் காடுகளில் ஒளிந்திருந்தால் அதனைச் சமாளிப்பதற்கான திட்டமும் அரசாங்கத்திடம் உண்டு — என்றும் அனுருத்த தெரிவித்தார். (ஐ)


## 1995/96 விதை உருளைக் கிழங்கு முற்பணம் மீளப் பெறல்

1995/96 காலபோகத்தில் விதை உருளைக் கிழங்கு பெறுவதற்காக பசுமை வேளாண் சேவையில் முற்பணம் செலுத்தியோர் தமது முற்பணத்தினை 20-12-1995 ற்கு முன்னர் புத்தூர்ச் சந்தி மீசாலையில் அமைந்துள்ள பசுமை வேளாண் சேவை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (39614)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்திரிகாவின் கோழிக் கதை

யாழ்ப்பாணத்தில் எஞ்சியுள்ள மக்களை எமது படையினர் நன்கு நடத்துகின்றனர். மக்களின் சொத்துக்களை அவர்கள் தொடவில்லை. கோழிகளைப் படையினர் பிடித்துத் தின்னவில்லை. கோழிகளும், ஆடுகளும் அங்கே இன்னும் ஓடித் திரிகின்றன; அதனை அமைச்சர் அனுருத்த நேரில் பார்த்துள்ளார் —

இவ்வாறு தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா.

சந்திரிகாவின் அரசாங்கம் பெரும் பணச் செலவில் கைப்பற்றிய யாழ்ப்பாணத்தில் மக்கள் இல்லாததால் —

மக்கள் வளர்த்த ஆடுகள், மாடுகள், கோழிகள் போன்ற கால்நடைகளை — பிராணிகளை — மட்டுமே அமைச்சர் கண்டிருக்க முடியும். அதில் ஒன்றும் விசேடமில்லை. அதனை ஒரு பெரும் விடயமாக வெளியே செல்வது பகிடிக்கிடமானதாகும். சிறுபிள்ளைத்தனமானதும் ஆகும்.

தமிழ் மக்களைப் பாதுகாப்பதில், அவர்களின் சொத்துக்களைப் பேணுவதில் தமது படையினர் அக்கறையாக உள்ளார்கள் என்பதனைக் காட்டுவதற்காக சந்திரிகா கூறிய ''பொடி'' உதாரணம் இது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் பணிபுரிந்த இராணுவத்தினருக்கும், தமது அரசின் கீழ் இயங்கும் இராணுவத்தினருக்கும் இடையே பெரும் வேறுபாடு இருக்கிறது. இப்போது இராணுவத்தினர் தமிழர்களை மனிதர்களாக மதித்து நடக்கிறார்கள்; என்று காட்டுவதே சந்திரிகாவின் நோக்கமாக இருந்தது.

ஆனால் அவரதுபடையினர் தமிழ் மக்களை எவ்வாறு பாதுகாக்கிறார்கள் என்பதற்கு —

இம்மாதம் ஐந்தாம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் புதுக்குடியிருப்பில் படையினர் தமிழ் மக்கள் முப்பது பேரைப் பழிவாங்கிப் பலி எடுத்த சம்பவம் நல்ல எடுத்துக்காட்டு.

நிராயுதபாணிகளான தமிழ்மக்களை ஆயுதபாணிகளான இராணுவத்தினர் துடிதுடிக்கச் சுட்டுக் கொல்வதை முந்திய அரசாங்கம் எந்தக் காலத்திலும் எந்த வகையிலும் கட்டுப்படுத்தியது கிடையாது.

சந்திரிகா அரசின் நிர்வாகத்தின் கீழ்,பராமரிப்பின் கீழ், இராணுவம் வந்த பின்னரும் இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டிலிருந்து தப்புவதற்காக —

வெளிநாட்டு உதவி பெறுவது போன்ற சுயநலத்தேவைகளுக்காக, — தமது இராணுவம் திருந்திவிட்டதாகவும், சீர்திருத்தப்பட்டு விட்டதாகவும் சந்திரிகா காட்ட முயல்கிறார். இது வெறும் கண் துடைப்பு.

தமிழ்ப் பொதுமக்களைக் கூட்டிச்சென்று சுட்டுக் கொன்று வீதிகளில் போடும் அக்கிரமத்தை சந்திரிகா அரசின் கீழ் உள்ள படைகள் மட்டக்களப்பில் மீண்டும் பெருமளவில் தொடங்கியுள்ளன.

இந்த இலட்சணத்தில் ஸ்ரீலங்கா படைகளை நம்பி வலிகாமம் மக்கள் தமது வீடு திரும்பவேண்டும் என்று சந்திரிகா எதிர்பார்க்கிறார்!

தமிழர்களைவிடக் கோழிகள் பெறுமதியானவை என்ற சிலேடையில் சந்திரிகா கோழிக்கதை கூறியிருப்பாரோ...?

# கண்ணி வெடிகளை முற்றாக அகற்ற இன்னும் 10 நாட்கள் செல்லுமாம்

## சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, டிச. 11

யாழ். நகரில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளையும் பொறிவெடிகளையும் முற்றாக அகற்ற இன்னும் 10 நாள்கள் செல்லும். அதன் பின்னரே அங்கு பொதுமக்கள் வசிப்பதற்கு நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்புக் கிடைக்கும்.

— இப்படிக் கூறியுள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க.

பி.பி.ஸி.சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.நரகப்பகுதி தற்சமயம் நூற்றுக்கு நூறு வீதம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பகுதி அல்ல; ஏனெனில் அங்கு கண்ணி வெடிகளும், பொறி வெடிகளும் இன்னமும் உள்ளன.

அவை அனைத்தும் அகற்றப்பட்டு, உள்ளே தங்கியுள்ள விடுதலைப் புலிகளைச் சரணடையச்செய்து அல்லது தற்கொலை புரியச் செய்து அல்லது கைது செய்வதுடன் படையினரின் நடவடிக்கை பூர்த்தியாக்கப்படும்.

கிழக்கில் இராணுவம் பலமிழந்து விட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் பொய்யாகும். — என்று சரத்முனசிங்கா மேலும் தெரிவித்தார்.

(ஐ- 6)

# ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலின் தலைமையில் சிவில் நிர்வாகக் குழு

## யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கையை மேற்கொள்ள இளைப்பாறிய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் பாஹொட தலைமையிலான இளைப்பாறிய சிவில் நிாவாக அதிகாரிகள் குழு அங்கு சென்றுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

சிவில் நிர்வாக அமைப்பு முறையை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்து அதிகாரிகள் அங்கிருந்து செயற்படுவார்கள் என்று வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 2 ஆயிரம் மக்களுக்கும் விசேட அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களத்தின் கிளை ஒன்று அங்கு அமைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மட்டக்களப்பில் மீண்டும் படையினர் அடாவடித்தனம்

மட்டக்களப்பு, டிச 11

மட்டக்களப்பில் ஸ்ரீலங்காப் படையினரால் அப்பாவித் தமிழர்கள் பழிவாங்கப்படும் படலம் மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளது.

மட்டக்களப்பில் கடந்த காலங்களில் பல படுகொலைகளைப் புரிந்து வந்த விசேட அதிரடிப்படையினர் மீண்டும் தமிழர்களைக் கடத்துதல், அவர்களைக் கொலை செய்து சடலங்களை ஒதுக்குப் புறமான இடங்களில் வீசுதல் பேன்ற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

வீதியால் செல்லும் தமிழர்கள் திடீர், திடீரென வெள்ளை வானில் வருவோரால் கடத்தப்படும் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன.

அரச படைகளின் இந்தக் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வைப்பகத்துக்கு வருமாறு நிதித்துறையினர் அறிவிப்பு

சாவகச்சேரி, டிச. 11

கீழ்க்காணப்படும் விலாசதாரர்களை நாளை செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள தமிழீழ வைப்பகத்துக்கு வருகைதருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

★ கார்த்திகேசு தில்லைநாதன்— 55 ஏ, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

★ சித்திரவேல் பரமகாந்தன் (ராசன்)— 107/7, 3ஆம் அரசடி வீதி, நல்லூர்.

★ ஏ. கனகலிங்கம் அல்லது ஆனந்தராணி — 3 ஆம் அரசடி வீதி, நல்லூர்.

★ மாரிமுத்து செல்வராசா அல்லது தனலட்சுமி— நவாலி தெற்கு, மானிப்பாய்.

★ இளையதம்பி கணேஸ் அல்லது பாக்கியம்— முருகமூர்த்தி கோவிலடி, நவாலி தெற்கு.

★ கே. பரஞ்சோதி அம்மா அல்லது சுதாகரன்— அரசடி வீதி, மூன்றாம் ஒழுங்கை, நல்லூர்.

★ வி. சிவசிதம்பரநாதன் — புத்தூர் மேற்கு, புத்தூர்.

★ கமலநாதன் விஜயகுமாரி — இலக்கம் 28, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு.

★ துரைராசா சௌத்தரராசா— 24/5, 2 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை கிழக்கு.

★ செல்லத்துரை சிவலிங்கம் — கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ கணபதிப்பிள்ளை செல்லத்துரை — கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

★ அ. சிவராசா— அரசடி றோட், சங்கத்தானை, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.

★ சின்னத்தம்பி விநாயகமூர்த்தி — மே.பா. அன்னசோதி, செபஸ்தியார் கோவிலடி, அளவெட்டி தெற்கு.

★ கே. நடராசா—உசன், மிருசுவில்.

★ கே. வரதராஜா — மே / பா. வேலுப்பிள்ளை இராசையா செந்தூரன் அரிசி ஆலை, கேரதீவு வீதி,வட்டக்கச்சி.

★ ஆறுமுகம் செல்வராசா — மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ க. குணரத்தினம் — உசன், மிருசுவில், 885 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.

★ தியாகராசா தயானந்தன்—'இலட்சுமி பவனம்' பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு.

★ இந்திரேஸ்வரி சிறிகாந்தன் (சாந்தா) — உசன் கந்தசாமி கோவிலடி, மிருசுவில்.

★ ரி.தனநாயகம்—மே/பா. தியாகராசா, பளை வீதி, புலோப்பளை.

★ ராசமலர் அருளானந்தன் — கைதடி கிழக்கு, கைதடி.

★ பரமேஸ்வரி நவரத்தினம் 'ரதி வாசம்', மீசாலை.

★ கே. தம்பிராசா — மே/பா. யே. நாகலிங்கம், தட்டார் வீதி, சாவகச்சேரி.

★ சுப்பிரமணியம் ஞானசுந்தரம் அல்லது இராஜேஸ்வரி ஞானசுந்தரம் — முத்தட்டு மடம் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

★ கனகம்மா நவரத்தினம் அல்லது சுலோசனாதேவி — உடுவில் தெற்கு,மானிப்பாய்.

★ என். கணபதிப்பிள்ளை — வ. க. ஞானானந்தன், மாவடிப் பிள்ளையார் கோவிலடி, மீசாலை.

★ கந்தசாமி(கந்தப்பா)— [illegible] வீதி, மதவடி, வல்வெட்டித்துறை. (ஐ)

# நலனோம்பு நிலையங்களில் சத்துணவு

எழுதுமட்டுவாள், டிச. 11

நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இரண்டு வயதுக்குஉட்பட்ட குழந்தைகளுக்கு பால்மா வகைகளும்—

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவும்—

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு பாலுணவுகளும், மாவகைகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (இ-152)

# தொண்டருக்கு பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, டிச. 11

பளைப் பிரதேச நலனோம்பு நிலையங்களில் பணிபுரியும் தொண்டர்களுக்கான பயிற்சிவகுப்புபச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர் வாழ்வு நிறுவன மண்டபத்தில் நிறுவனத் தலைவர் கு. ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சி வகுப்பில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் ஐ. செல்லையா, பொது சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் த. இராசநாயகம், மேற்பார்வை குடும்பநல சேவையாளர் செல்வி ந. பாலாம்பிகை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(இ-117)

## யாழ்ப்பாணத்துக்கு

# பால்மா வகைகளே முதலில் அனுப்பப்படுமாம்

கொழும்பு, டிச. 11

யாழ்ப்பாணத்தில் உள்ள பிள்ளைகளின் பால்மா தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், முதலில் பால்மா வகைகளே விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இப்படிக் கூறினார் வடக்கு புனர்நிர்மாணத்துக்குப் பொறுப்பான செயலணித் தலைவரும் வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா.

மீட்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உடனடியாக புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் —

மின்சாரம், குடிதண்ணீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் —

அங்குள்ள மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள் அனுப்பப்படும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்

(இ-3)

## சங்கிலியன் ஆண்ட மண்ணை சிங்களவன் ஆளுவதா?

வயற்காணி தோட்டமெல்லாம்
வளரவில்லை விளையவில்லை
புயலடித்து மரம்முறிந்து
புற்றெழுந்து கிடக்கிறது காண்.
கோயில் குடிமனைகள்
குலமிழந்த பேய்வீடாய்
நாளும் சிதைந்தழிந்து
நலமிழந்து போகிறது காண்.
வலிகாம வீடெங்கும்
வசந்தம் பொங்கிவர
வாழ்ந்திருந்த குயிற்கூட்டம்
பலிகண்டு பறந்தது காண்.
பழிதுலங்கா வாழ்வும்
பண்பாட்டுச் சிறப்பும்
செழித்திருந்த யாழ். நகரில்
சேதங்கள் விளைகிறது காண்.
அழிவுகளை பெருக்கிடவே
அன்னியப் பகை வந்து
பொழிகின்ற குண்டுகளால்
புனித மண் அழிகிறது காண்.
பேரனும் பூட்டனும் கட்டி
பேரெடுத்த பள்ளிக்கூடம்
அசுரன் பகைக் கையினால்
சுடுகாடாய்ப் போகிறது காண்.
அம்மம்மா சின்னவனை அருகணைத்து
அம்புலியைக் காட்டி மகிழ்ந்திருந்த
எம் முற்றமெங்கும்
எதிரி பகை பெருகியது காண்.
சங்கிலியன் ஆண்ட மண்ணில்
சாதனைகள் விளைந்த மண்ணில்
சிங்களவன் கொடி பறந்திடவா
சின்னவனே நீ எழுந்திடடா

— காரை எம். பி. அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர், பிக்குகள் 'ரபான்' அடித்து யாழ். வெற்றியை கொண்டாடினர்

## நேற்று விடுதலையானோரில் ஒருவர் பேட்டி

வடமராட்சி, டிச. 11

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதும் பலாலியில் படையினரும், பௌத்த பிக்குகளும், சில தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி 'ரபான்' அடித்து வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

பலாலியில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்து நேற்று விடுதலையான மல்லாகத்தைச்சேர்ந்த நாகரட்ணம் மோகன் ராஜ் என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள தனது மாமியாரின் வீட்டைப் பார்க்கச் சென்ற சமயம் இவர் படையினரிடம் சிக்கினார்.

பலாலியில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் தமக்கு நேர்ந்த அனுபவங்களை 'உதயன்' செய்தியாளரிடம் அவர் விவரித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலத்தில் 'நீர்வேலியைப் பிடித்து விட்டோம்;' கோப்பாயைப் பிடித்து விட்டோம்'' என்று இராணுவத்தினர் அடிக்கடி எம்மிடம் வந்து கூறுவர்.

ஒரு நாள்' 'யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டோம்'' என்று எம்மிடம் சொன்னார்கள்

அன்று சுமார் இருபது பிக்குமார் கூடி அங்கு பிரித் ஓதினர். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றியை இராணுவத்தினருடன் சேர்ந்து அவர்களும் கொண்டாடினர். தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களும் அதில் கலந்து கொண்டனர்.

தீவட்டிகளை ஏந்தியவாறு அவர்கள் அனைவரும் ஊர்வலம் போன்று வரிசையில் சென்றனர். ''ரபான்'' அடித்து வெற்றியைக் கொண்டாடினர்.

தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த சுமார் 25 பேர் வரை பலாலியில் உள்ளனர். படையினருடன் சேர்ந்து அவர்களும் எங்களைத்தாக்குவதுண்டு.

அவர்களுக்கென அங்கே தனியாக இருப்பிட வசதிகள் உள்ளன. வெள்ளை நிறவான் ஒன்றை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த தமிழ் குழுவினரை இராணுவத்தினர் பெரிதாக மதிப்பதில்லை. எடுபிடி வேலைகளுக்கும் படையினர் அவர்களைப் பயன்படுத்துகின்றனர்.

நாங்கள் விடுவிக்கப்பட இருந்த சமயம் ''ஊருக்குப் போங்கள், உங்களைத்தேடி ஷெல்கள் வந்து மண்டையைப் பிளக்கும்'' என்று சில இராணுவத்தினர் எம்மிடம் தெரிவித்தனர்.

''யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டோம்; ஏனைய இடங்களையும் பிடிப்போம்'' என்றும் கூறி எம்மை அச்சுறுத்தினர்.

பீரங்கி குண்டுகள், ஷெல்கள் என்பன அங்கு மூடைகள் போன்று அடுக்கி வைக்கப்பட்டுள்ளன

இராணுவ நடவடிக்கையின் போது பலியாகும் படையினரின் சடலங்கள் பலாலியிலேயே எரிக்கப்படுகின்றன. டயர்களைப் போட்டே சடலங்கள் எரியூட்டப்படுகின்றன. அச்சமயங்களில் ரயர் எரியும் மணம் மூக்கைத் துளைக்கும்.

ஏனைய இடங்களில் உள்ள படையினருக்கு உணவு ஏற்றிச்செல்லும் லொறிகள் திரும்பி வரும்போது அவற்றில் வலிகாமம் பகுதியில் தோட்டங்களில் இருந்து எடுத்த வாழைக்குலைகள், மரக்கறி வகைகளை படையினர் ஏற்றி வருவர்.

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் எமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகள் சொல்லில் அடங்கா— என்று அவர் தெரிவித்தார்

நேற்று விடுவிக்கப்பட்டவர்களைப் பார்ப்பதற்காக அவர்களது உறவினர்களும் நண்பர்களும் பெரும் எண்ணிக்கையில் பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் திரண்டிருந்தனர்.

விடுதலையானவர்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு கரைக்கு அழைத்து வரப்பட்டபோது கரையில் காத்திருந்த அவர்களது உறவினர்கள், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் பெயர் சொல்லி அழைத்தவாறு அழுது புலம்பி ஆனந்தக் கண்ணீர் சிந்திய காட்சி நெஞ்சை நெகிழ வைத்தது.

(ஐ-173)


# உதயன்

## இளை நிலையம்

## சாவகச்சேரி

வாசகர்கள், விளம்பரதாரர்கள் செய்தியாளர்களே!

உங்கள் வசதி கருதி எங்கள் கிளை நிலையம்

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடி 9 ஆம் இலக்கத்தில் இயங்குகிறது

★ செய்தி ★ விளம்பரம்

★ பத்திரிகை விநியோகம்

காலை 8. 30 மணி முதல் மாலை 6 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.


## படையினர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கிறது. ஆனால் வழமை போல் இதுவும் ஒரு தப்புக் கணக்குத்தான். துன்பப்படப்போவது தமிழ் மக்களே.

பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் அரசியல் விமர்சகர் தராக்கி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது போன்ற நடவடிக்கையால் ஏற்கனவே மட்டக்களப்பில் 15 ஆயிரம் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.


## அறிவித்தல்

இன்று திங்களும் 15 - 12 - 95 வெள்ளியும் பிரயான ஒழுங்குகளுக்காக எம்மிடம் பதிவு செய்தவர்கள் இன்று காலை (11 - 12 - 95) சந்திக்கவும்.

# தர்மிஷா ரவல்ஸ்

மீன் சந்தை ஒழுங்கை, சாவகச்சேரி.

(சி–3137)



## திறப்பு விழா

# ஹப்பி ரெக்ஸ்ரைல்

## (ஹப்பி துணியகம்)

மேற்படி நிறுவனம் 11-12-1995 அன்று கிளிநொச்சியில் (கண்டி வீதி) தனது கிளை நிறுவனத்தை மகிழ்வுடன் ஆரம்பிக்கிறது.

நண்பர்கள், வாடிக்கையாளருக்கு அறியத் தந்து மகிழ்கிறோம்.

நிறுவன உரிமையாளர்

நெல்லியடி,
கரவெட்டி.

(39618)


# அமைச்சர் நிமால் சிறிபால யாழ். நகர் செல்வாராம்!

கொழும்பு, டிச. 11

சிவில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வார முற்பகுதியில் யாழ் செல்லவிருப்பதாக அரச வானொலி அறிவித்திருக்கிறது.

அதியுயர் அதிகாரம் கொண்ட அதிகாரிகள் சிலரும் அமைச்சருடன் விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கை ரெலிகொம், மின்சார சபை, வீதி அபிவிருத்தி கூட்டுறவு மொத்த விற்பனை சுகாதாரம் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் அமைச்சருடன் செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 23 பொதுமக்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசேவ் (22 வயது — ஆனைக்கோட்டை)

★ அன்ரன் ஜோர்ஜ் சந்திரசேகரன் (17 வயது — குருநகர்)

★ முடியப்பு ஜெயராஜ் (22 வயது — ஆனைக் கோட்டை)

★ அன்ரன் விஜேந்திரன் (26 வயது — பண்டத்தரிப்பு)

★ நந்தகுமார் கோகுலன் (19 வயது — நீர்வேலி)

★ ஆசீர்வாதம் றிச்சார்ட் (சங்கானை)

★ செட்டியார் முத்துராஜா (31 வயது — பருத்தித் துறை)

★ சௌரி சௌந்தரநாயகம் (மாதகல்)

★ செல்லப்பா சிதம்பரநாதன் (20 வயது — அச்சுவேலி)

★ கதிரன் தர்மலிங்கம் (35 வயது — உரும்பராய்)

★ கனகரத்தினம் நித்தியானந்தன் (28 வயது — உரும்பராய்)

★ நாகலிங்கம் புவனேந்திரன் (24வயது — உரும்பராய்)

★ சின்னத்தம்பி கனி (26 வயது — சங்கானை)

★ சங்கானை ஜெயச்சந்திரன் (17வயது — சங்குவேலி)

★ செபமாலை மகாலிங்கம் (20 வயது — சங்கானை)

★ கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா (21 வயது — சங்கானை)

★ பசுபதி இராஜரத்தினம் (32 வயது — சங்கானை)

★ சிதம்பரநாதன் சுரேஸ்குமார் (29 வயது — அளவெட்டி)

★ கிருஷ்ணபிள்ளை ஜெயசுதன் (19 வயது — அளவெட்டி)

★ நாகரத்தினம் மோகனராஜ் (22 வயது — மல்லாகம்)

★ செல்வராஜ் அந்தனிலால் (22 வயது — அளவெட்டி)

★ சிவராசா சித்தேஸ்வரன் (23 வயது — அளவெட்டி)

★ அல்பிரட் அருளானந்தராசா (22 வயது — பண்டத்தரிப்பு) (இ-3-173)

## வித்துடல் விதைப்பு

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட படையினருடன் இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை ஆனந்த் (செல்லத்தம்பி விக்கினேஸ்வரன் — மூதூர்) என்ற போராளி மருத்துமனையில் வீரச்சாவடைந்தார்.

இவரது வித்துடல் இன்று திங்கள் பிற்பகல் 3 மணிவரை பெற்றோரின் வருகைக்காக தென்மராட்சிக் கோட்டப் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும். பின்னர் வித்துடல் மட்டுவில் பொன்னம்மான் குடியிருப்புத் திட்டத்தில் மக்களின் இறுதிவீரவணக்கத்துக்காக வைக்கப்படும்.

பின்னர் அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். (ஐ)

## மேலும்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

— மல்லாகம்)

★ நாகலிங்கம் சுகந்தன் (21 வயது — மல்லாகம்)

★ குணசேகரா (21 வயது — மல்லாகம்) ஆகியோரும் பண்டத்தரிப்பில் கடந்த ஏப்ரல் மாதம் பிடிபட்ட

★ பூலோகன் இலங்கரத்ன (21 வயது — சாந்தை)

★ கார்த்திகேசு விஜயன் (20 வயது)

★ பாலையா பரமேஸ்வரன் (22 வயது)

★ கதிரமலை சிவனேஸ்வரன் (20 வயது)

★ ஐயாத்துரை ஆனந்தவேல் (22 வயது) ஆகியோரும் அடங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஓகஸ்டில் அரசு முன் வைத்த தீர்வு யோசனைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதை விட முக்கியமானவை என்பதே அமெரிக்காவின் பார்வை ஆகும். — என்றார். (அ-ஐ)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சின்னத்துரை

(திருவர்)

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் உசனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சின்னத்துரை (திருவர்) 10.12.95 ஞாயிறன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலும்மயிலுவின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற பவளபாக்கியத்தின் அன்புக் கணவரும், கணேசலிங்கம், அற்புதநாதன் கதிர்காமநாதன், சோதிநாதன், சர்வேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, குகநாதன், சாரதாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் யனிதா, கஜந்தன், வித்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.12.1995 ஞாயிறன்று உசனில் உள்ள அவரது தற்காலிக வீட்டில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
அற்புதம்
(மகன்)

சி. அற்புதநாதன்
கந்தசாமி கோவிலடி,
உசன்.

(39489)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 11-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org